**எண்.5/7/4/6/பதிவாளர்/பால்வளம்/2023/PF-I/148**
**புதுச்சேரி அரசு**
**கூட்டுறவுத்துறை (பால் வளம்)**
**வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.**
----

புதுச்சேரி, நாள். 27.09.2023

**புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1972, சட்டம் எண்.34(9) கீழ் பிறப்பிக்கபட்ட ஆணை**

பொருள்: சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) பி.596 - இயக்குநர் மற்றும் தலைவர் திரு.செ.பன்னீர்செல்வம் அவர்களை தகுதி நீக்கம் செய்வது - ஆணை பிறப்பிப்பது - தொடர்பாக.

பார்வை:
1. திரு.G.குப்புராமன் முதுநிலை ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட - 08.09.2023 தேதியிட்ட விசாரணை அறிக்கை.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் 13.09.2023 தேதியிட்ட காரணம் கேட்பு அறிவிப்பு எண்.5/7/4/6/பதிவாளர்/பால்வளம்/2023/ PF-I/137 .
3. 15.09.2023 தேதியிட்ட திரு.செ.பன்னீர்செல்வம், தலைவர் சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) பி.596-அவர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்க கடிதம்.

***

பார்வை 2-ல் குறிப்பிட்டுள்ள காரணம் கேட்பு அறிக்கையின் மூலம் சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) பி.596-ன் (இனி "சங்கம்" என குறிப்பிடப்படும்) தலைவர் மற்றும் இயக்குநர் திரு.செ.பன்னீர்செல்வம் அவர்களை ஏன் கீழ்கண்ட காரணங்களுக்காக தகுதி நீக்கம் செய்யக்கூடாது என்பதற்கான விளக்கங்களை சமர்பிக்க 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்ட பிரிவு 34(9)ன் கீழ் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை 01.07.2023 முதல் 30.06.2026 வரையிலான காலத்திற்கு சங்கத்தை நிர்வகிக்க 9 இயக்குநர்கள் கொண்ட குழு போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 9 இயக்குநர்களில் திரு.G.பெருமாள், உறுப்பினர் எண்.55 அவர்கள் சங்கத்தின் தலைவராக ஏக மனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், 26.07.2023 தேதியிட்ட இச்சங்க நிர்வாக குழு தீர்மானம் எண்.1-ன் படி திரு. G.பெருமாள் அவர்கள் சங்க தலைவர் மற்றும் நிர்வாக குழு இயக்குநர் பதவியை இராஜினமா செய்ததும், அதன் காரணமாக ஏற்பட்ட காலி இடத்திற்கு திரு.பன்னீர்செல்வம் த/பெ செல்வராஜ் அவர்களை சங்க இயக்குநராக நியமன முறையில் (co-option) நிர்வாக குழு இயக்குநர்கள் நியமனம் செய்துள்ளார்கள்.

அதன் தொடர்ச்சியாக திரு.செ.பன்னீர்செல்வம் சங்க நிர்வாக குழுவின் தலைவராக, சங்க நிர்வாக குழு இயக்குநர்களால் தேர்வு செய்யபட்டுள்ளார். ஆனால், மேற்படி சங்க நிர்வாக குழு இயக்குநராகவும் மற்றும் தலைவராகவும் தேர்தெடுக்கப்பட்டது சம்மந்தமாக இந்நாள் வரை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களுக்கு தெரிவிக்கவில்லை.

**மேலும், மேற்படி சங்க துணைவிதியின் படி நிர்வாக குழு இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட வரையறுக்கப்பட்ட தகுதியின்படி திரு.செ.பன்னீர்செல்வம் சங்கத்திற்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலத்திற்கு தகுதி பெறுவதற்கான அளவு பால் ஊற்றவில்லை என்பது உறுதிசெய்யப்படுகிறது.**

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

தொடர்ச்சி/-

ஆதலால், திரு.செ.பன்னீர்செல்வம் பெயர் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை. இதன்படி திரு.செ.பன்னீர்செல்வம் மேற்குறிப்பிட்ட சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட தேவையான தகுதியை பெறவில்லை என்பது பார்வை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள விசாரணை அறிக்கை மூலம் இவ்வலுவலகத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, சங்க நிர்வாக குழு இயக்குநராக தேர்தெடுக்க தகுதிபெறாத திரு.செ.பன்னீர்செல்வம் மேற்படி சங்கத்தின் நிர்வாக குழு இயக்குநர் காலி இடத்திற்கு இயக்குநராகவும் மற்றும் தலைவராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டு சங்கத்தின் நிதிபரிமாற்றம் செய்துள்ளது சங்க துணைவிதியின் படி முரணானது.

ஆகவே, புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1972 சட்டபிரிவு 34(9) கீழ் இச்சங்க நிர்வாக குழு இயக்குநராக தேர்ந்தெடுக்கபட தேவையான தகுதிகளின்றி திரு.செ.பன்னீர்செல்வம் அவர்கள் சங்கத்தின் நிர்வாக குழு இயக்குநர் மற்றும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவந்துள்ளார் என்பது உறுதிசெய்யப்பட்டது. எனவே, திரு.செ.பன்னீர்செல்வம் அவர்கள் மேற்படி சங்க இயக்குநர் குழுவில் இயக்குநராக பதவி வகிக்க தகுதியற்றவர் என கீழ் கையொப்பம் இட்டவரால் முடிவு செய்யும் முன்பு திரு.செ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு பார்வை 2-ல் கண்டுள்ள காரணம் கேட்பு அறிவிப்பு மூலம் அவரின் விளக்கத்தினை அளிக்க ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

பார்வை 3-ல் கண்டுள்ள திரு.செ.பன்னீர்செல்வம் அவர்களின் விளக்க கடிதத்தில் கூறியுள்ள விளக்கங்கள் எதுவும் ஏற்றுகொள்ளும்படியாக இல்லை என்பதாலும் அவர் இயக்குநர் பதவிக்கு தகுதியற்றவர் என்பதாலும் திரு.செ.பன்னீர்செல்வம், தலைவர், சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தயாளர் சங்கம் (அ) எண்.பி.596, அவர்களை சங்க இயக்குநர் குழுவில் இயக்குநராக பதவி வகிக்க தகுதியற்றவர் என தீர்மானிக்கப்பட்டு அவரை 1972 ஆம் ஆண்டு புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்ட பிரிவு 34(9)ன் கீழ் தகுதி நீக்கம் செய்ய ஆணைபிறபிக்கப்படுகிறது.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES
PUDUCHERRY

(ச. யஷ்வந்தய்யா)
8/1/6 கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்

<u>பெறுநர்</u>

1. திரு.செ.பன்னீர்செல்வம்,
   சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) எண்.பி.596,
   மதகடிப்பட்டு அஞ்சல்,
   புதுச்சேரி.

**<u>நகல் பெறுவோர்:</u>**

1. அனைத்து நிர்வாகக் குழு இயக்குநர்கள்,
   சிலுக்காரிப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) எண்.பி.596,
   மதகடிப்பட்டு அஞ்சல்,
   புதுச்சேரி.
2. மேலாண் இயக்குனர்,
   புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
3. மேலாண் இயக்குனர்,
   புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கி.
4. கிளை மேலாளர்,
   புதுவை மாநில கூட்டுறவு வங்கி திருபுவனை கிளை, புதுச்சேரி.
5. The Web Editor.
6. கோப்பு 2023.